வடமராட்சிக்கான
உதயன்
கிளைக் காரியாலயம் தற்போது
மாலுசந்தி அல்வாயில்
கிளைப் பணிமனையில் செய்திகள் மற்றும் விளம்பரங்களை காலை 08.30 முதல் இரவு 10.00 மணிவரை கையளிக்கலாம்.
T.P: 021 4927 454, 077 120 9996

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 68

வியாழக்கிழமை 02 பெப்ரவரி 2023 | தை 19 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 12






75ஆவது சுதந்திரதின் நிகழ்வுகளுக்கான ஒத்திகை நிகழ்வுகள் நேற்றுக் காலிமுகத்திடலில் நடைபெற்றன. சுதந்திரதின நிகழ்வுகளுக்காக 200 மில்லியன் ரூபா செலவிடப்படுகின்றது என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது. நாட்டின் அனைத்துத் துறைகளும் சீர்குலைந்துள்ள நிலையில், அதிக செலவில் சுதந்திரதின நிகழ்வுகள் நடத்தப்படுவது விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது.

## வலிகாமம் வடக்கில் 108 ஏக்கர் படைகளிடமிருந்து விடுவிப்பு!

### பலாலி அன்ரனிபுரத்தில் நாளை நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 2

வடக்கில் காணிகளை விடுவிக்கவேண்டாம் என்ற மகாநாயக்கர்களின் எதிர்ப்பையும் மீறி வலி. வடக்கில் 108 ஏக்கர் காணி நாளை வெள்ளிக்கிழமை பாதுகாப்புத் தரப்பால் யாழ். »11

## '13ஐ' நடைமுறைப்படுத்துங்கள் தளராது வலியுறுத்தும் இந்தியா

கொழும்பு, பெப்.2

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இந்தியா ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் வலியுறுத்தியுள்ளது. »11

## கூட்டத்தில் பங்கேற்காத சாள்ஸ்

யாழ்., பெப். 2

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் திருமதி பி.எம்.எஸ். சாள்ஸின் பதவி விலகலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொள்ளாத போதும், தேர்தல்கள் ஆணைக் »10

# '13' முழுமையாக நடைமுறை: அமெரிக்காவுக்கு ரணில் உறுதி

கொழும்பு, பெப்ரவரி 2

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்று அமெரிக்காவுக்கு உறுதியளித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. »11

## பெற்றோல் விலை அதிகரிப்பு

யாழ்., பெப்.2

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் , லங்கா ஐ.ஓ.சி. நிறுவனமும் பெற்றோலின் விலையை அதிகரித்துள்ளன. இந்தவிலைஅதிகரிப்பு நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில், ஒக்ரைன் 92 »11

## மாகாணத்தின் கல்வி அதிகாரத்தை பிடுங்கியெடுத்தது கொழும்பு அரசு

'திவிநெகும' பாணியில் ஆளுநர்களின் இணக்கத்தைப் பெற்று நடந்தேறியது

13ஐ நடைமுறைப்படுத்துவதாக கூறிக்கொண்டு இருப்பதைப் பறிக்கும் ரணில் அரசாங்கம்

யாழ்ப்பாணம், பெப்.2

13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கும் நிலையில், மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட கல்வியிலிருந்து ஒரு அதிகாரத்தை கொழும்பு அரசாங்கம் பிடுங்கியெடுத்துள்ளது. 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ள நிலையில், இந்த »11

## ரணிலுக்கு நெருக்கடி கொடாமல் தேவையானவற்றைப் பெறுங்கள்

### தமிழ்க் கட்சிகளுக்கு அமெ. அறிவுரை ரணிலுக்கு முழுமையான ஆதரவு

கொழும்பு, பெப்.2

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் பலம் இல்லாதவராகத் தென்பட்டாலும் படிப்படியாகப் பல விடயங்களை நிறைவேற்றிக்கொள்ள முடியும். சிறுபான்மைக் கட்சிகள் »11

## முக்கியமான விடயங்களுடன் ரணிலின் கொள்கை விளக்கம்

கொழும்பு, பெப்.2

நாடாளுமன்றம் மீண்டும் கூடும் தினத்தன்று கொள்கை விளக்கவுரையில் 13ஆவது அரசமைப்புத் திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பாக முக்கியமான அறிவிப்பொன்றை »11

## தமிழ் அரசியல் கைதிகள் மூவர் நேற்று விடுதலை

யாழ்ப்பாணம், பெப்.2

தமிழ் அரசியல் கைதிகள் மூவர் பொதுமன்னிப்பில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஒருவர் இன்னும் இரு மாதங்களில் தண்டனைக் »10

## கல்வியங்காடு தாக்குதலுக்கு டென்மார்க்கிலிருந்து பணம்!

### மேலும் ஒருவர் கைது; பொலிஸ் தீவிர விசாரணை

யாழ்ப்பாணம், பெப்.2

கல்வியங்காட்டில் கடை ஒன்றுக்குள் வாள்களுடன் புகுந்து தாக்குதல் நடத்தி 5 லட்சம் ரூபா கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். »10

## உள்ளூராட்சித் தேர்தலை தடுக்கமாட்டார் ரணில்

### விக்ரோறியா நூலண்ட் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.2

உள்ளூராட்சிசபைத் தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் 9 ஆம் திகதி நிச்சயம் நடத்தப்படும் என்று தன்னிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க »10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய உறுப்பினர்களை நியமிப்பதால் தேர்தலை ஒத்திவைக்க முடியாது

### தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் திட்டவட்டம்

**கொழும்பு, பெப். 2**

**அரசமைப்புப் பேரவையால் ஆணைக்குழுவுக்குப் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டாலும், தேர்தலைப் பிற்போடமுடியாது. அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டாலும் அரசமைப்பில் எமக்கு உரித்தாக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதில் உறுதியாகவுள்ளோம் என்று சுயாதீனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவா தெரிவித்தார்.**

தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

21ஆவது அரசமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளிட்ட அனைத்து ஆணைக்குழுக்களினதும் செயற்பாடுகள் இடைநிறுத்தப்படும்.

எனினும் அரசமைப்புப் பேரவையால் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படும் வரை, எம்மால் எமது நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியும். ஆணைக்குழு உறுப்பினர் நியமனம் தொடர்பில் அரசமைப்புப் பேரவையில் பேசப்பட்டிருந்தாலும், அதற்கு மேலும் 2 மாதங்கள் செல்லும் என்பதால் அது குறித்து அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

மாறாக புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டாலும் அவர்களால் எம்மால் ஆரம்பிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்ல முடியும். எதிர்வரும் 10ஆம் திகதி தேர்தலுடன் தொடர்புடைய 3 வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. அவற்றில் ஒன்று தேர்தலைப் பிற்போடுமாறும், ஏனைய இரண்டும் தேர்தலை நடத்துமாறும் கோரித் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. நீதிமன்ற நடவடிக்கைகளைத் தவிர வேறு எந்த வகையிலும் தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்தமுடியாது.

ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டாலும், எம்மால் நிறைவேற்றப்பட வேண்டிய அரசமைப்பு ரீதியிலான பொறுப்பைக் கைவிடக்கூடாது என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாகவுள்ளோம் - என்றார். (ம)

## மைத்திரியின் மன்னிப்பை கத்தோலிக்க மக்கள் ஏற்கார்

### கத்தோலிக்கத் திருச்சபை கண்டனம்

கொழும்பு, பெப். 2

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டு மக்களிடம் கோரிய மன்னிப்பை ஏற்றுக்கொள்ளமுடியாது என கத்தோலிக்கத் திருச்சபை தெரிவித்துள்ளது.

கொழும்பு பேராயரின் தகவல் தொடர்பாளர் அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த பெர்னாண்டோ ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

தமது ஆட்சிக்காலத்தில் தமக்குத் தெரியாமல் வேறொரு தரப்பால் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் உயிரிழந்தவர்கள், காயமடைந்தவர்கள், அதேபோன்று கத்தோலிக்க மக்களிடம் மன்னிப்புக் கோருவதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரியுள்ளார். இந்தவிடயத்தில் தாம் தவறிழைத்துவிட்டதாக அர்த்தப்படாது எனவும் தம்மால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் தவறிழைக்கும் பட்சத்தில் அதற்கு ஜனாதிபதியாக பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு தனக்கு உள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

அவர் ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக தகவல் கிடைத்திருந்தும் நடவடிக்கை எடுக்கத் தவறியமைக்கு அவரே பொறுப்பு. இதற்கு அவர் சிறைக்குச் செல்லவேண்டும்.

கத்தோலிக்கர்கள் தன் மீது அன்பாக இருக்கிறார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார். குண்டு வெடிப்பு நிகழ்ந்த நீர்கொழும்பு அல்லது கொச்சிக்கடை தேவாலயத்துக்கு ஒருமுறை வருகை தந்து பார்க்கட்டும். கத்தோலிக்கர்கள் அவர் மீது அன்பாக இருக்கிறார்களா? என்பதை அப்போது அவர் புரிந்துகொள்வார் - என்றார். (ச-இ)

## க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை விண்ணப்பம் இணையவழியில்

கொழும்பு, பெப். 2

இந்த ஆண்டு இடம்பெறவுள்ள 2022 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை இணையத்தினூடாக மாத்திரம் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, பரீட்சைக்கான விண்ணப்பங்கள் நேற்று புதன்கிழமை முதல் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அனைத்து பாடசாலை விண்ணப்பதாரிகள் தங்கள் பாடசாலைகளின் அதிபர்கள் ஊடாகவும், தனியார் விண்ணப்பதாரிகள் தாமாகவே இணையத்தினூடாகவும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

இதற்காக பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளங்களான www.doenets.lk அல்லது www.onlineexams.gov.lk/eic என்பவற்றை அணுகலாம். அத்துடன் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ அலைபேசி செயலியான "Exams SRILANKA" ஐ பயன்படுத்தலாம். தேவைப்படும் நேரத்தில் சமர்ப்பிப்பதற்காக, பரீட்சார்த்திகள் விண்ணப்பத்தின் அச்சிடப்பட்ட நகலை வைத்திருத்தல் அவசியமாகும். மேலும் பெப்ரவரி 28 ஆம் திகதி பிற்பகல் 12 மணிக்கு மேல் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியாது எனவும் பரீட்சை விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் திகதிகளை நீடிக்க எந்த முடிவும் எடுக்கப்படமாட்டாது என்றும் பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது. (ஒ.14.இ)

## உள்ளூராட்சி மன்றங்களை கலைத்து சுயாதீனம் பேணுக

### ஆணையாளர்கள் வேண்டுகோள்

கொழும்பு, பெப்.2

எதிர்வரும் மார்ச் 9ஆம் திகதி உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் உள்ளூராட்சி மன்றங்களைக் கலைத்து சுயாதீனமாக தேர்தலை நடத்த வழிவகுக்கவேண்டும்- இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் உள்ளூராட்சி ஆணையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகளுடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போதே இந்த விடயம் வலியுறுத்தப்பட்டது.

உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்படாததால் அதன் சொத்துக்கள் சட்டவிரோதமாக பயன்படுத்தப்படுவதை தடுப்பதில் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படுகிறது என உள்ளூராட்சி ஆணையாளர்கள் சுட்டிக்காட்டினர்.

உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான அமைச்சிடம் இந்தக் கோரிக்கையை முன்வைக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க அறிவுறுத்தினார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் வெளியி டப்பட்டுள்ள சுற்றுநிருபத்துக்கமைய சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டிய அவசியத்தையும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார். (ச-இ)

### தமிழர்களை ஏமாற்றும்

## சர்வகட்சிக் கூட்டத்தை ஜே.வி.பி. ஆதரிக்காது

### அநுர திட்டவட்டம்

கொழும்பு, பெப். 2

தேசிய பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விவகாரத்தில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஆகியோரின் நிலைப்பாடுகளுக்கு இடையில் பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு என்று தெரிவித்து தமிழ் மக்களை ஏமாற்றும் சர்வகட்சிக் கூட்டத்தை ஜே.வி.பி. ஒருபோதும் ஆதரிக்காது - இவ்வாறு தெரிவித்தார் அந்தக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸநாயக்க.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசாங்கத்தின் உறுதியான நிலைப்பாட்டை முரண்பாடற்ற வகையில் ஜனாதிபதி முன்வைத்தால் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு தொடர்பான பேச்சுக்களில் கலந்துகொள்வோம். தேசிய இனப்பிரச்சினை விவகாரத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு பொழுதுபோக்காகப் பார்க்கிறாரே தவிர அவரிடம் உண்மை நோக்கம் கிடையாது.

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கும் விடயத்தில் அரசாங்கத்துக்குள் பரஸ்பர வேறுபாடு காணப்படுகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஸ் குணவர்த்தன மற்றும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோர் இந்த விடயத்தில் மாறுபட்ட நிலைப்பாட்டில் உள்ளார்கள். தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு தொடர்பில் அரசாங்கம் ஒன்றிணைந்து ஒரு இணக்கப்பாட்டை முன்வைத்தால் இது தொடர்பான பேச்சுக்களில் கலந்துகொள்வோம். அதனை விடுத்து ஜனாதிபதியின் ஊடக காட்சிப்படுத்தலில் கலந்துகொள்வது பயனற்றது - என்றார். (ம)

## திருக்கேதீச்சரத்தில் சிவானந்த குருகுலம்

மன்னார், பெப். 2

திருக்கயிலாய பரம்பரை தருமையாதீனமும் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையும் இணைந்து ஆரம்பிக்கவுள்ள "சிவானந்த குருகுலம்" எனும் பேரிலான சிவாகம வேதப் பாடசாலையும் திருமுறைப் பண்ணிசைக் கல்லூரியும் திருக்கேதீச்சர ஆலய வளாகத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 10 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளன.

இந்தக் குருகுலத்தில் இணைந்து கற்கவிரும்புவோர் குறித்த தினத்தில் வருகைதந்து குருகுல மாணவர் சேர்க்கை தொடர்பான வரையறைகளை அறிந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குருகுலத்தில் சிவாகமம், வேதம், திருமுறை பயில விரும்பும் சிவாச்சாரிய மரபுடையோரும், சைவக்குருமார்களும், திருமுறைப் பண்ணிசை பயில விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்.

மேலும் பயிற்சி மாணவர்களுக்கு தங்குமிடமும் உணவும் கல்வியும் இலவசமாக வழங்கப்படும் என ஆலய திருப்பணிச்சபை அறிவித்துள்ளது. (ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் சுதந்திரதினம் தமிழ்த் தேசத்தின் கரிநாள்!

## பல்கலை மாணவர்களுக்கு வலுக்கிறது ஆதரவுக்குரல்

**யாழ்ப்பாணம், பெப். 2**
**சிறிலங்காவின் சுதந்திரதினமான பெப்ரவரி மாதம் 4ஆம் திகதியை கரி நாளாகப் பிரகடனப்படுத்தும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முடிவுக்கு ஆதரவைத் தெரிவித்துள்ளது தமிழ் சிவில் சமூக அமையம் மற்றும் அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையம்.**

இதுதொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:
உண்மையில் இந்தத் தீவின் வடக்கு - கிழக்கை தாயகமாகக் கொண்ட தமிழ்த் தேசத்தை ஆக்கிரமித்திருந்த ஆங்கிலேயர் தாம் கொண்டிருந்த ஆக்கிரமிப்பு மேலாதிக்கத்தை இந்தத் தீவின் இன்னொரு தேசமாகிய பௌத்த சிங்கள தேசத்திடம் தாரைவார்த்த கரி நாளாகவே பெப்ரவரி நான்காம் திகதியை நாம் கருதுகின்றோம்.
இன்றுவரை இரண்டு லட்சத்துக்கும் மேலான தமிழ் மக்களைக் கொன்றும் பத்து லட்சத்துக்கும் அதிகமானவர்களை புலம்பெயர வைத்தும், பல்லாயிரம் தமிழர்களை காணாமற்போகச் செய்தும் பலநூறு தமிழர்களை பல்லாண்டுகளாக சிறைகளில் அடைத்தும், தமிழர்களின் தாயகத்தில் பல ஆயிரம் சதுர கிலோமீற்றர் நிலங்களை பலவழிகளிலும் அபகரித்தும், தமிழர்களின் பல ஆயிரம் கோடி செல்வங்களை அழித்ததும் மட்டுமல்லாது தனிச்சிங்களச்சட்டம், கல்வியில் தரப்படுத்தல், வேலைவாய்ப்புகளில் பாரபட்சம், அபிவிருத்தியில் புறக்கணிப்பு என தமிழர்களைத் தொடர்ச்சியாக ஓரம் கட்டியும் வந்துள்ளது சிங்கள பௌத்த தேசம்.
ஆங்கிலேயர் வெளியேறிய பின்னான கடந்த 75 ஆண்டுகள் முழுவதும் தமிழின அழிப்பில் தனது பெருமளவு கவனத்தையும் பெரும்பாலான வளங்களையும் குவித்ததன் மூலம் எம்மை அழித்து பலவீனமாக்கியது மட்டுமல்லாது இன்று தானும் பொருளாதாரப் பேரழிவைச் சந்தித்து நிற்கின்றது சிறிலங்கா. ஆனாலும் இந்த நிலையிலும்கூட, இன்றும் தமிழின அழிப்புக்காக, தான் தேர்ந்த எந்தவொரு செயற்பாடுகளிலும் சிறிலங்கா கிஞ்சித்தேனும் தளர்வை ஏற்படுத்தாமல் இயங்கிக்கொண்டு தான் இருக்கின்றது. இந்நிலையில் சிறிலங்காவின் சுதந்திரதினம் உண்மையில் தமிழர்களின கரிநாள் என்பதே தமிழ்த் தேசத்தின் யதார்த்தமாகும். யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முன்னெடுத்துள்ள இந்தப் போராட்டத்துக்கு எமது பூரண ஆதரவைத் தெரிவிக்கின்றோம் - என்றுள்ளது. (ம)



## சுதந்திரதினத்தை எதிர்த்து யாழில் சுவரொட்டிகள்


யாழ்ப்பாணம், பெப். 2
பல்கலைக்கழக மாணவர் சமூகம் மற்றும் சிவில் சமூகத்தின் ஏற்பாட்டில், இலங்கையின் 75ஆவது சுதந்திரதினத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாண நகரிலும், திருநெல்வேலி உள்ளிட்ட பகுதிகளிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.
தமிழர் தேசம் மீதான ஆக்கிரமிப்பு நாள் எனக் குறிப்பிடப்பட்டு தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளைச் சித்திரித்தும், அதற்கு எதிரான போராட்டத்தைப் பறைசாற்றும் வகையிலுமான படங்களுடன் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.
இதேவேளை இலங்கையின் சுதந்திரதினம் தமிழர்களுக்கு கரிநாள் என்பதை வலியுறுத்தி நாளைமறுதினம் மக்கள் எழுச்சிப் பேரணியில் ஒன்று திரளுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ-14,66)

## சுதந்திரதின ஏற்பாட்டில் தடை; பெண் உட்பட இருவர் கைது!!

கொழும்பு, பெப். 2
காலிமுகத்திடலில் சுதந்திரதினக் கொண்டாட்டத்தை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள இடத்துக்கு அருகில் அமைதியற்ற வகையில் செயற்பட்ட பெண் ஒருவர் அடங்கலாக இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு காலிமுகத்திடலில் புகைப்படம் எடுக்க இருவர் முற்பட்டுள்ளனர். அதன்போது, ஏற்பாட்டாளர்கள் அதற்குத் தடை விதித்துள்ளனர். அதனால் குறித்த இருவரும் அங்கு அமைதியற்ற வகையில் செயற்பட்டுள்ளனர். அதனையடுத்தே 36 வயதான பெண், 30 வயதான ஆண் என இருவர் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது.
இதேவேளை சுதந்திரதினத்தை கரிநாளாகப் பிரகடனப்படுத்துமாறு வடக்கு-கிழக்கு மாணவர் ஒன்றியம் அனைத்து அமைப்புக்களிடம் கோரிக்கை விடுத்து ஆதரவு பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-14,இ)

## கறுப்பு சுதந்திரதினப் பேரணிக்கு ஜனநாயக த.தே. கூட்டணி ஆதரவு

### கோ.கருணாகரன் எம்.பி. தெரிவிப்பு




யாழ்ப்பாணம், பெப். 2
இலங்கையின் சுதந்திரதினம் தமிழ் மக்களுக்கு கறுப்பு தினம் என்று பிரகடனப்படுத்தி நாளைமறுதினம் 4ஆம் திகதி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம் பெறவுள்ள பேரணிக்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியாகத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பூரண ஆதரவு வழங்கும்.
அன்றையதினம் வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் அனைவரும் கிளர்ந்தெழவேண்டும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோ.கருணாகரன் (ஜனா) தெரிவித்தார்.
மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் கூறுகையில், 1983ஆம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரம் தமிழர்களின் ஆயுதப்போராட்டத்தை வீறுகொண்டு எழவைத்தது. 2009 மே 18 இல் அந்தப் போராட்டம் மௌனிக்கப்பட்டது. ஆனாலும் இன்றுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எமது மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கு ஜனநாயக ரீதியாகவும் இராஜதந்திர ரீதியாகவும் போராடிக் கொண்டு வருகின்றது.
தற்போது சுதந்திரதினத்துக்கு முன்னர் இலங்கையில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான தீர்வாக 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவுள்ளேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறி வருகிறார்.
இதற்கு சிங்கள பேரினவாத சக்திகள் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தினால் நாடு பிளவுபடும் என போர்க்கொடி தூக்கியுள்ளன.
சுதந்திரம் இல்லாத நாட்டிலே தமிழர்களாகிய நாம் சுதந்திர தினத்தைக் கொண்டாட வேண்டிய தேவை இல்லை. அந்த வகையில் வடக்கு- கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்படும் கண்டனப் பேரணியுடன் நாமும் கைகோர்த்து கிளர்ந்தெழுவோம்- என்றார். (ச-150)

## சீரற்ற காலநிலையால் அறுவடைகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், பெப். 2
கடந்த இரண்டு நாள்களாக நிலவி வரும் சீரற்ற காலநிலையால் பெரும்போக நெல் அறுவடைப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.
அநேகமான வயல்களில் நெல் அறுவடை மேற்கொள்ளப்பட்டு அறுவடை செய்த நெற்கதிர்கள் காயவிடப்பட்டன. இந்நிலையில் காற்றுடன் கூடிய மழை நீடித்துவருவதால் வடக்கின் பல்வேறு மாவட்டங்களிலும் காயவிடப்பட்ட நெல்லும் மழையில் நனைந்து பாதிக்கப்பட்டுள்ளன என விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (ச-17)

## சிங்கள தேசத்துக்கும் சுதந்திரதினம் கரிநாளே

### பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், பெப். 2
அரசாங்கம் நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை கோலாகலமாகக் கொண்டாடவுள்ள நிலையில் அது சிங்கள தேசத்துக்கும் கரிநாளாகவே அமையும். தமிழருக்கு விடிவு கிடைக்காத வரை சிங்களதேசமும் இருண்டே காணப்படும். இவ்வாறு தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டினார்.
இலங்கையின் சுதந்திரதினம் தொடர்பாக அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:
மோசமான பொருளாதார சீரழிவுக்குள் சிக்கித் திணறிக் கொண்டிருக்கும் இலங்கையில் உணவின்றித் தவிக்கும் சிங்கள தேசத்தைப் பற்றியும் சிந்திக்காது பெருமெடுப்பில் சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்குத் தயாராகி வருகிறார் ஜனாதிபதி.
நாட்டின் பொருளாதாரம் மீண்டெழ முடியாத படுகுழிக்குள் வீழ்ந்து கிடப்பதற்கு தென்னிலங்கை ஆட்சியாளர்களால் காலாதிகாலமாக முன்னெடுக்கப்பட்டுவரும் இனவழிப்பும் அடக்குமுறையுமே பிரதான காரணங்களாகும். இனப்பிரச்சினைக்குத் தீர்வின்றி ஒற்றையாட்சி முறைமையின் கீழ் தமிழர் தேசம் அடக்கி ஒடுக்கப்பட்டதன் விளைவே இந்தப் பொருளாதார படுவீழ்ச்சி.
இதனால் தமிழ்மக்களுடன் சேர்ந்து சிங்கள மக்களும் சொல்லொணாத் துயரங்களை சந்தித்து வருகின்றனர். தமிழர்களுக்கு விடிவு கிடைக்காத வரைக்கும் நாட்டுக்கும் மீட்சியில்லை. சிங்களதேசமும் இருண்டே இருக்கும்- என்றுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் மின்விநியோகத்துக்கு மின்சார சேமிப்பு கட்டமைப்பு

## கொரிய அரசுடன் ஒப்பந்தம்

கொழும்பு, பெப். 2
மின்தடையின்றி தொடர்ச்சியான மின்சார விநியோகத்தை உறுதி செய்வதற்கு மின்சார சேமிப்பு கட்டமைப்பு ஒன்றை உருவாக்க கொரிய அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.
இந்தத் திட்டத்துக்காக கொரிய அரசாங்கம் 11.9 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது.
இதன்மூலம் அம்பாந்தோட்டை துணை மின் நிலையத்துக்கு அருகில், 8 மணித்தியாலங்களுக்கான 5 மெகாவோட் கொள்ளளவு கொண்ட மின்சாரம் சேமிக்கப்படும்.
இதற்கென கொரிய குடியரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் மானிய உதவிக்கான கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். செரிமானப் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால், உணவு விஷயத்தில் கவனம் தேவை.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதர வகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். அனுகூலம் உண்டாகும்.

**கடகம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். உறவுகளால் செலவுகள் ஏற்படும். ஆதாயமும் கிடைக்கும். எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காக பாடுபடுவீர்கள்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பெருமை உண்டாகும். செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கிய முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். அந்நியோன்யம் அதிகரிக்கும். வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** புதிய முயற்சிளை தொடங்குவது நல்லது. வாழ்க்கைத் துணையின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும். சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

# ஆசிரியர் சேவைக்கு 26,000 பட்டதாரிகள்!

## இணையம் மூலம் விண்ணப்பம் கோரல்

கொழும்பு, பெப்.2
26 ஆயிரம் பட்டதாரிகளை அரச சேவையில் உள்ளீர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை இணையவழியூடாக சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சு கோரியுள்ளது.
2018, 2019 மற்றும் 2020 ஆகிய காலப் பகுதிகளில் அரச சேவையில் இணைந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட 40 வயதுக்குட்பட்ட பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
விண்ணப்பங்களின் எண்ணிக்கையை கவனத்திற்கொண்டு எதிர்வரும் மார்ச் மாதம் நடளாவிய ரீதியில் ஆள்சேர்ப்பு பரீட்சை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாகாண பாடசாலைகளுக்கு மாகாண மட்டத்திலும் மற்றும் தேசிய மட்டத்திலும் நேர்முகத்தேர்வு நடத்தப்படவுள்ளது.
போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த பட்டதாரிகள் மூன்று வருட சேவைக் காலத்தின் பின்னர் ஆசிரியர்களாக ஆசிரிய சேவையில் உள்வாங்கப்பட்டு 5 வருடங்கள் சேவை செய்வதற்கு விருப்பமான மாகாணத்தைத் தெரிவு செய்யும் வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.
விண்ணப்பங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் http://applicationsdoenets.lk/exams என்ற இணையத்தினூடாக விண்ணப்பித்து சமர்ப்பிக்கலாம் என கல்வியமைச்சு மேலும் அறிவித்துள்ளது. (ச-இ)




# வரப்பிரசாதங்களற்ற நாடாளுமன்ற அணி

## பெரமுனவின் ஒரு பகுதியினர் அதிருப்தி

கொழும்பு, பெப்.2
இலங்கை நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் துரதிர்ஷ்டவசமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் அணி என்றால் அது எமது அணிதான் என்று பொதுஜன பெரமுனவின் ஒருதொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.
பொதுஜன பெரமுனவின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிந்தக அமல் மாயாதுன்ன இது தொடர்பில் தெரிவித்ததாவது:-
நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு எமக்குக் கிடைப்பதில்லை. அந்த நிதியைப் பயன்படுத்தி பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சந்தர்ப்பம் இருந்தது. நாங்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட நாளில் இருந்தே பல்வேறு துரதிர்ஷ்டவசமான சம்பவங்களே நடந்தன. பொருளாதார நிலைமைகள் உட்பட பல காரணங்களால் எமது பன்முகப்படுத்தப்பட்ட நிதி எமக்கு கிடைக்காமல் போனது. உண்மையில் நாங்கள் மிகவும் துரதிர்ஷ்டசாலிகள் - என்றார். (ம)

# அறிவற்ற அமைச்சராலேயே மின்கட்டமைப்பு குலைவு

## பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தலைவர் ஆதங்கம்

கொழும்பு, பெப்.2
அரசியல் அழுத்தங்களால் சுயாதீனமாகச் செயற்பட முடியாத நிலை காணப்படுகிறது. அடிப்படை அறிவில்லாதவரை மின்சாரத்துறை அமைச்சராக நியமித்துள்ளதால் நாட்டின் மின் கட்டமைப்பு கேள்விக்குள்ளாகியுள்ளது- இவ்வாறு இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.
பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
உயர்தரப் பரீட்சைக் காலத்தில் தடையில்லா மின்சாரம் வழங்க மின்சாரத்துறை இடமளிக்காது பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு மத்தியில் முரண்பாட்டைத் தோற்றுவித்துள்ளது. அத்துடன் நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மின்கட்டணத்தை மீண்டும் அதிகரித்து மக்களை மென்மேலும் நெருக்கடிக்குள்ளாக்குகிறது மின்சாரத்துறை. இதற்கு இடமளிக்கமுடியாது.
மின்சாரத்துறை அமைச்சரின் தன்னிச்சையான செயற்பாடுகளால் சுயாதீனமாக செயற்படமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. என்னைப் பதவியிலிருந்து நீக்குவதால் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற முடியாது. பதவி என்பது நிலையற்றது. தற்போதைய மின்சாரத்துறை அமைச்சருக்கு துறைசார் திறமை கிடையாது. குரைக்கும் நாய் கடிக்காது என எண்ணி செயற்படுகின்றோம்- என்றார். (ச-இ)

# அரச நிறுவனங்களை மூடுவதற்கு இதுவரையில் தீர்மானிக்கவில்லை

## பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

எந்தவொரு அரச நிறுவனத்தையும் மூடுவதற்கு இதுவரை தீர்மானிக்கப்படவில்லை என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.
தற்போதைய பொருளாதாரம் மற்றும் சமூக நிலை தொடர்பில் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடன் அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற சந்திப்பின்போது பிரதமர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாட்டின் பொருளாதார நிலையில் தனியார் மற்றும் அரச நிறுவனங்களுக்கு பெரிய பொறுப்புகள் உள்ளன. அந்த வகையில் அந்நிய செலாவணியை அதிகரிப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தவிர எந்த அரச நிறுவனங்களையும் மூடுவதற்கு இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை -என்றார். (எ-14.இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஸ்ஷஹம் - நேஸ்ஹம் - அஞ்சாஹம

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## வார்த்தைகளில் தொங்கும் ரணில்

இறுதியாக நடைபெற்ற சர்வக்கட்சி கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 'அதிகாரங்களைப் பகிர்வதற்குத் தயார். ஆனால், பெடரல் (சமஷ்டி) ஆட்சி முறையை எதிர்க்கின்றேன். ஒற்றையாட்சி முறையிலேயே நாம் இருக்கின்றோம்' என்று கூறியிருக்கின்றார்.

இதே ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது, 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதான யாழ்ப்பாணப் பயணத்தின்போது, 'உதய'ன் பத்திரிகைக்கும் வருகை தந்திருந்தார். இதன்போது,

*''2004 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமதானப் பேச்சுக்களின்போது பெடரல் (சமஷ்டி) ஆட்சி முறைக்கு இணங்கியிருந்த ரணில் விக்கிரமசிங்க, 2019 ஆம் ஆண்டு நல்லாட்சிக் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அரசமைப்பு உருவாக்கத்தில் ஏக்கிய ராஜ்ஜிய – ஒருமித்தநாடு – என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியிருந்தார்.. ஏன் சமஷ்டி என்ற சொல்லாடலைப் பயன்படுத்தவில்லை? சமஷ்டி என்றால் பிரிவினை என்றா கருதுகின்றீர்கள்?''*

என்று கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு,

*''அது பிரிவினை அல்ல. நைஜீரியா போன்ற நாடுகளில் சமஷ்டி பிரிவினைக்கு வழிவகுத்துள்ளது. மற்றொரு புறத்தில் பிரிட்டன் போன்ற நாடுகளில் ஒற்றையாட்சி நிலவினாலும் அங்கும் ஸ்கொட்லான்ட், நெதர்லான்ட் போன்ற நாடுகள் பிரிந்து செல்லவும் ஏதுநிலை காணப்பட்டது. எனவே வார்த்தைகளில் தொங்கிக் கொண்டிராமல் தீர்வுகளைக் காணவேண்டும். ஆங்கில வார்த்தைகள் சில இப்போது பல அர்த்தங்களைக் கொண்டிருப்பதால், எமக்கு என்ன தேவையோ அவற்றை ஒன்று சேர்த்துப் பெற்றுக்கொள்வதே சிறந்தது''* என்று ரணில் குறிப்பிட்டிருந்தார்.

ரணில் விக்கிரமசிங்க கூறுபவை சரியானவைதான். ஆனால், இலங்கையில் ஒற்றையாட்சியின் பிரயோகம் எப்படியிருக்கின்றது என்பதில்தான் எல்லாமே தங்கியிருக்கின்றது. ரணில் இப்போது குறிப்பிடும், சமஷ்டி ஆட்சியை எதிர்க்கின்றேன் என்பதும் அதிகாரங்களைப் பகிரத் தயார் என்பதுமே ஒன்றுக்கொன்று முரணானவையே. அவர் கூறுவதைப்போன்று வார்த்தைகளில் தொங்காவிடினும், அதிகாரங்களை எப்படி பகிரப்போகின்றார் என்பதை வெளிப்படுத்தவேண்டும். ஒற்றையாட்சியின் கீழ் பரவலாக்கப்பட்ட அதிகாரங்களை கொழும்பு ஆட்சிப்பீடம் கடந்த காலங்களில் எப்படிக் கையகப்படுத்தியது என்பது எல்லோருக்கும் தெரியும். இலங்கையில் ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரங்களைப் பகிர்வது என்பது சாத்தியமேயில்லை. ரணில் விக்கிரமசிங்க கூறுவதைப் போன்று வெளிநாடுகளில் ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரங்கள் பகிரப்பட்டிருந்தாலும் இலங்கையில் அதன் சாத்தியமின்மை தொடர்பில் ஒன்றும் அறியாதவர் அல்லர் அவர். இலங்கையில் அரசமைப்பு ரீதியான சர்ச்சைகள் எழும்போது அதற்குத் தீர்வு காணும் வகையில் இலங்கையில் அரசமைப்பு நீதிமன்றம் உருவாக்கப்படவில்லை. உயர்நீதிமன்றமே அதற்கான வியாக்கியானங்களை வழங்கி வந்திருக்கின்றது; வருகின்றது.


மாகாணசபைகளுக்கு உரித்தான காணி அதிகாரம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் கிட்டத்தட்ட 32 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததாகவும் அவற்றில் வியாக்கியானம் வழங்கிய நீதிமன்றம், அதிகாரம் கொழும்பு அரசுக்கு – மத்திக்கே – உரியதாகவும் அர்த்தப்படுத்தியிருந்ததாகவும், இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருடனான சந்திப்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டியதையும் இங்கு தொட்டுச் செல்லவேண்டியுள்ளது. ரணில் விக்கிரமசிங்க வார்த்தைகளில் தொங்கத் தேவையில்லை என்று கூறினாலும், அரசமைப்பு சவால்களுக்கு வியாக்கியானம் வழங்கும் உயர் நீதிமன்றம் ஒற்றையாட்சி என்பதை எப்படி பொருள்கோள்படுத்தியுள்ளது என்பதையும் இங்கு அவதானிக்கவேண்டும்.

எனவே ரணில் விக்கிரமசிங்க இப்போது கூறுவதைப்போன்று அதிகாரங்களைப் பகிரும் செயன்முறையும் எப்படி நடக்கும் என்பதை பகிரங்கமாக வெளிப்படுத்தாதவரை, அவர் கூறும் சமஷ்டி ஆட்சிமுறையை எதிர்ப்பேன் என்கின்ற நிலைப்பாடு இருக்கும் வரை, தமிழ் மக்களுக்கான இனப் பிரச்சினை தீர்வு என்பது கண்ணாமூச்சி ஆட்டம்தான்.

நாளொரு நல்வார்த்தை

"வாசித்தல் மற்றும் மேலும் மேலும் அதிக அறிவைப் பெறுதலை விட சிறந்தது எதுவும் இல்லை"

– ஸ்டீபன் ஹக்கிங்




# 13க்கு ஏற்படும் எதிர்ப்பு வெட்கக்கேடான நிலை!

## கடும் போக்காளர்களுக்கு ஜனாதிபதி ரணில் பதிலடி

கொழும்பு, பெப். 2

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நிறைவேற்றப்படக்கூடாது என்று போர்க்கொடி தூக்குவோர் முதலில் அந்தத் திருத்தச் சட்டத்திலுள்ள பரிந்துரைகளை வாசித்துப் பார்க்க வேண்டும். அதைவிடுத்து 13ஆவது திருத்தம் முழுமை பெற்றால் நாடுபிளவுபடும்என்றுபதறியடிப்பது வெட்கக்கேடானது – இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தால் நாட்டுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. அதை முழுமையாக நடைமுறைப்படுத்துவதால் நாடு ஒருபோதும் பிளவுபடாது. இந்தச் சட்டம் முழுமையாக நிறைவேற்றப்படக்கூடாது என்று போர்க்கொடி தூக்குவோர் முதலில் அந்தத் திருத்தச் சட்டத்திலுள்ள பரிந்துரைகளை வாசித்துப் பார்க்க வேண்டும். மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் கட்டாயம் அதனை வாசிக்கவேண்டும்.

அதைவிடுத்து இந்த திருத்தச் சட்டம் முழுமை பெற்றால் நாடு பிளவுபடும் என்று பதறியடிப்பது வெட்கக்கேடானது. பெரமுனவைச் சேர்ந்த ஒருவர், இருவர் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராகக் கருத்துக்களை வெளியிடுவதால் ஒட்டுமொத்த மொட்டுக் கட்சியுமே 13 ஆவது திருத்தத்துக்கு எதிர் என்று எவரும் தப்புக்கணக்குப் போடக்கூடாது. 13 ஆவது திருத்தத்தை விமர்சிப்போர் தாராளமாக விமர்சிக்கட்டும். ஒவ்வொரு விமர்சனத்துக்கும் என்னிடம் பதில்கள் உண்டு" - என்றார். (ம)

# மாகாணசபையை இனி எதிர்க்கப்போவதில்லை

## அநுரவுக்கு வந்த ஞானம்

மாகாணசபை முறைமை தமிழர்களின் உரிமைகளைத் தற்போது பாதுகாக்கின்றது. அந்த முறைமையை இனியும் எதிர்க்கப்போவதில்லை . இவ்வாறு தெரிவித்தார் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரான அனுர குமார திஸநாயக்க.

மாகாணசபை முறைமைக்கு ஆரம்பத்தில் ஜே.வி.பி.யினர் கடுமையான எதிர்ப்பைப் பதிவுசெய்து வந்தனர். எனினும் அந்தக் கட்சி தற்போது மாகாண சபை முறைமையை அனுசரிக்கும் போக்கைக் கைக்கொண்டு வருகின்றது. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாகாணசபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டபோது நாட்டில் அமைதியற்ற தன்மை காணப்பட்டது. அந்தக் கால கட்டத்தில் சிங்கள அரசியல்வாதிகளுக்கும், தமிழ் தலைமைகளின் இணக்கப்பாடான பேச்சுக்களுக்கும் மத்தியில் மாகாணசபை முறைமை அறிமுகப்படுத்தப்படவில்லை. இந்தியாவின் தேவைக்காகவே மாகாணசபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் தற்போது நிலைமை மாற்றமடைந்து விட்டது - என்றார். (ம)

| | | |
|---|---|---|
| நாளை | 03.02.2023 | சுபநேரம் : 06.35 - 08.05 |
| | வெள்ளிக்கிழமை | ராகுகாலம் : 11.05 - 12.35 |
| | தை 20 | பிரதோஷவிரதம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு – கிழக்கு மாகாணங்களில் இந்திய ஆக்கிரமிப்பு அதிகரிக்கும்



கொழும்பு, பெப். 2

13 ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டால், வடக்கு கிழக்கு மாகாணங்களில் இந்தியாவின் ஆக்கிரமிப்பு அதிகரிக்கும். இதனால், நாட்டு மக்கள் மத்தியில் இன விரிசல் மேலோங்கும் – இவ்வாறு தெரிவித்தார் எல்லே குணவன்ஸ தேரர்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் 13ஆம் திருத்தத்தை முழுமையாகச் செயற்படுத்தும்போது பொலிஸ் மற்றும் காணி அதிகாரம் உட்பட மேலும் பல அதிகாரங்களை மாகாணசபைகளுக்கு வழங்க நேரிடுகிறது. அது இலங்கையின் அரச பாதுகாப்பு, பிராந்திய ஒருமைப்பாடு. பொருளாதார இறையாண்மை மற்றும் அபிவிருத்திக்குப் பெரும் அச்சுறுத்தலாகும்.

13ஆம் திருத்தம் மூலம் காணி அதிகாரம் பரவலாக்கப்படுகின்றது. இதனால், மாகாணசபைக்கு தற்துணிவு அதிகாரங்கள் கிடைக்கின்றன. அரச காணிகள், மற்றும் தொல்பொருள்கள் தொடர்பில் மாகாணசபை சுயாதீனமாக நடவடிக்கை எடுக்க முடியுமான நிலை ஏற்படுகிறது. தற்போதைய ஜனாதிபதி இந்திய வெளிவிவகார அமைச்சருடன் கலந்துரையாடி இருப்பது, இவ்வாறு வளங்கள் மற்றும் பூமியை ஆக்கிரமிக்கும் இந்திய சதித்திட்டத்தை இந்தியாவின் தயாரிப்பான மாகாண சபைப் பொறிமுறை ஊடாக செயற்படுத்துவதாகும்.

எனவே அரசமைப்பின் 13ஆம் திருத்தத்தை மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு இல்லாமல் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டாம் - என அவர் தெரிவித்தார். (ம)

## 13ஆவது திருத்தத்தால் இனவாதம் தலைதூக்கும்

*இலங்கை 'கம்யூனிச கட்சியின்' பதில்தலைவர் கண்டுபிடிப்பு*

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தால் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட இனவாதம் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தால் மீண்டும் தலைத்தூக்கிவிடுமா என்ற அச்சம் காணப்படுகிறது - இவ்வாறு தெரிவித்தார் இலங்கை கம்யூனிச கட்சியின் பதில் தலைவர் வீரசுமன வீரசிங்க.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தினால் இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் தோற்றம்பெறும் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நன்கு அறிவார். 1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்துடன் 13 ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டதை தொடர்ந்து நாட்டில் அழிவுகள் தோற்றம் பெற்றன.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை தவிர ஏனைய அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமாயின் மாகாணசபைத் தேர்தலை நடத்தவேண்டும், அதற்கு முழுமையான ஆதரவு வழங்குவோம். ஆனால், நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ள பின்னணியில் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி இனங்களுக்கு இடையில் முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் செயற்பாடுகளுக்கு இடமளிக்கமுடியாது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்கத் தயாராக இருந்தேன். ஆனால் தென்னிலங்கை அரசியல்வாதிகள் தடையாக இருந்தார்கள் என்ற நிலைப்பாட்டை தமிழ் மக்கள் மத்தியில் தோற்றுவிக்க ஜனாதிபதி முயற்சிக்கிறார் - என்றார். (ம)


**Northern Chamber of Industries**

**வடக்கிற்கான தொழிற்துறைகள் மன்றம்**

**வேலைவாய்ப்பு**

**அலுவலக உதவியாளர்**

**Vacancy**

**Office Assistant**

நிறுவனத்தினது நிருவாக உத்தியோகத்தர்களுடன் இணைந்து நிறுவனத்தின் தினசரி நிர்வாகச் செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் ஒத்துழைக்கக்கூடிய திறமையான அலுவலக உதவியாளருக்கான பதவி நிலையை நிரப்புவதற்குரிய விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றோம்.

**தகைமைகள்**

- வயது எல்லை 20 - 35 வருடங்கள்
- GCE O/L சாதாரண பொதுத்தராதரம் வரையான கல்வி. GCE O/L தேர்ச்சி விசேட தகைமையாகக் கணிக்கப்படும்.
- ஆரம்ப நிலைக்கணனி அறிவு
- அடிப்படை அலுவலக உபகரணங்கள் தொலைத்தொடர்பு சாதனங்களை (telephone) இலத்திரனியல் உபகரணங்களை (computer printer, photo copier, scanner) கையாள்வதில் முன் அனுபவம்
- களவேலைகளில் (field work) ஈடுபாடு மோட்டார் வண்டி ஓட்டுந் திறன் அதற்கான லைசன்ஸ்.

பெப்ரவரி மாதம் 15 ஆந் திகதி பணி நிலையில் அமரும் வகையில் நேர்முகத் தேர்வு இடம்பெறும் பெப்ரவரி மாதம் 10 ஆந் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை வேலை வழங்கும் நிறுவனத்துடன் தொடர்பற்ற இரண்டு நடுவர்களுடைய பெயர் (non related Referees) அடங்கிய உங்களது சுயவிபரக் கோவையையும் இணைத்து கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**Chairman**
**Northern Chamber of Industries**
**No. 54, Clock Tower Lane**
**Jaffna.**



**திருநெல்வேலி தெற்கு பரமேஸ்வராச் சந்தி**
**அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்**
**வருடாந்த பொதுக்கூட்டம்-2022**

| | | |
|---|---|---|
| காலம் | : | 19.02.2023 ஞாயிற்றுக்கிழமை |
| நேரம் | : | காலை 9.30 மணி |
| இடம் | : | ஆலய மண்டபம் |
| தலைமை | : | உப தலைவர் |

எமது பரிபாலனசபையின் (நிர்வாகசபை) 19.01.2023 கூட்டத் தீர்மானத்திற்கமைவாக பொதுச்சபைக்கூட்டம் 19.02.2023 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. பொதுச்சபைக்கான பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் 15.02.2023க்கு முன்னதாக ஆலய பரிபாலனசபை (நிர்வாகசபை)யிடம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கொவிட்-19 நோய்த்தொற்று காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளாக பொதுச்சபைக்கூட்டம் பிற்போடப்பட்டு வந்துள்ளமை யாவரும் அறிந்ததே.

பரிபாலனசபை(நிர்வாகசபை)
செயலாளர்
அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்
பரிபாலனசபை



**வீட்டுக்கிருத்திய அழைப்பு**

கடந்த 04.01.2023 புதன்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி
அமரர் திருமதி
**பாக்கியலட்சுமி**
**சுப்பிரமணியம்**



அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (03.02.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

424/1/1, கில்னர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

சு.சிறிகாந்தன் (ராஜா)
மகன்.

(CS/23243)(4:6)



**16ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர்
**சூசைப்பிள்ளை**
**வேதநாயகம்**

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08. 02. 1942 | 02. 02. 2007 |

அப்பா! அன்பினால் எம்மை அரவணைத்து பாசத்தால் எமைத் தாங்கி
இன்பத்தையும் துன்பத்தையும் எமக்கு புரியவைத்து
எம்மை நல்வழியில் வழிகாட்டிய
எங்கள் அன்பு அப்பாவே!
இன்றுடன் உங்களைப் பிரிந்து ஆண்டுகள் பதினாறு ஆனதுவோ!

என்றும் உங்கள் பசுமையான நினைவுகளுடன்

மகன்மார்கள்
வே.ரவீந்திரகுமார் (ரவி)
வே.சுரேந்திரகுமார் (சுரேஸ்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம் மோசடிக்கு போலி ஆவணங்கள்

## சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, பெப். 2

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்துக்கு வரும் நபர்களிடம் பணம் மற்றும் தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொண்டு போலி ஆவணங்களைத் தயாரித்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் பத்தரமுல்லை, இசுருபாய குடிவரவு திணைக்களத்துக்கு கடவுச்சீட்டு பெற்றுக்கொள்ள வந்த நபர்களிடம் போலியான வேலை வாய்ப்பு அனுமதிப்பத்திரம் தயாரித்து, ஒரு நாள் சேவையின் மூலம் கடவுச்சீட்டை தயார் செய்து தருவதாகக் கூறி பல்வேறு நபர்களிடம் ஆயிரம் ரூபா முதல் 20 ஆயிரம் ரூபா வரை வசூலித்துள்ளனர் என்று தலங்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் விண்ணப்பதாரர்களிடம் இருந்து பலவந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் மற்றும் தேசிய அடையாள அட்டைகளும் மீட்கப்பட்டன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தலங்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். மேலும் கடவுச்சீட்டு பெற செல்பவர்கள, இத்தகைய மோசடியாளர்கள் தொடர்பில் எச்சரிக்கையாக இருக்குமாறு பொலிஸாரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஒ-14,இ)

## பெயர் மாற்றம்

**சந்திரதேவன் சர்மிளா** ஆகிய நான் இன்றுமுதல் எனது பெயரை **சந்திரதேவன் ருத்விகா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **சந்திரதேவன் ருத்விகா**என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன்.

(cs22354) (2.6)

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சுப்பிரமணியம் கனகேஸ்வரி**

**தோற்றம்** 15.01.1948

**மறைவு** 25.01.2021

**திதி:- துவாதசி (02.02.2023)**

அம்மா......
எமை நீர் பிரிந்து ஆண்டுகள்
இரண்டு ஆனாலும்
உம் நினைவுகள் தேடாத
நொடிகளே இல்லை...
மனம் ஆறுதல் கொள்ள மறுக்கிறது

நிழலாய் என்றும் நீரே இருந்தீர்
இன்று நிழலே இன்றித்
தவிக்கின்றோம்!
என்றும் உம் நினைவுகளுடனும்
நீங்காத சோகத்துடனும் தவிக்கும்...

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

**உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.**


C.C.T.M. பாடசாலை வீதி,
இருபாலை கிழக்கு, கோப்பாய்

**குடும்பத்தினர்.**
**077 329 6658**

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 25 . 10 . 1941

**மறைவு** 01 . 02 . 2023



## திருமதி அன்னம்மா பரமேஸ்வரன்

காரைநகர், பாலாவோடை களபூமியை பிறப்பிடமாகவும் இரண்டாம் குறுக்குத்தெரு, வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா பரமேஸ்வரன் நேற்று (01.02.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை பரமேஸ்வரன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் கனகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தனபாக்கியம், சரோஜினிதேவி, காலஞ்சென்ற தங்கம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிவசுப்பிரமணியம் (உரிமையாளர் கதிர் ஓயில் விற்பனை நிலையம், கிளிநொச்சி), நிர்மலாதேவி, சிவயோகநாதன் (உரிமையாளர் நியூ சிறிரங்கன் அரிசி ஆலை வேப்பங்குளம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இந்துமதி, கதிர்காமநாதன், கமலினி ஆகியோரின் அன்பு மாமியாரும் யாழினி, சிந்தியா, பிரதீபன், கஜானன், பவஜினி, கஜானி, கவின், துவாரகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தனோஜனின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2023) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இறம்பைக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**

**2ஆம் குறுக்குத்தெரு,**
**வவுனியா.**

(AVO/1077)4.6

**குடும்பத்தினர்.**

**077 614 5312, 077 545 7759, 077 134 0009**

## கார்/வான் வாடகைக்கு

கார்கள்/வான்கள் வாடகைக்கு விடப்படும்.

RSP Rent A Car 077 898 9691

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் கனகராசா பரமேஸ்வரி

**தோற்றம் : 20.09.1945** **மறைவு : 12.02.2022**



**திதி:ஏகாதசி (02.02.2023)**
**வியாழக்கிழமை**

ஐயிரண்டு திங்கள் யங்கமெலா
நொந்து பெறும்பையனென்ற
போதே பிரிந்தெடுத்துச்
செய்யவிருகைப் புறத்திலேந்திக்
கனக முலைதந்தாளை
எப்பிறப்பிற் காண்போமாயினி

அமரர் கனகராசா பரமேஸ்வரி
குடும்பத்தினர் கண்டுவில்
ஒழுங்கை, சாவகச்சேரி

(CR 39183)1-6

## பொது அறிவித்தல்
## மாநகரசபை யாழ்ப்பாணம்
## பாதீடு - 2023

யாழ் மாநகர சபையின் 2023 ஆம் ஆண்டிற்கான பாதீடு (வரைவு 2023.02.01 தொடக்கம் 2023.02.10 ஆம் திகதி வரை

- யாழ் மாவட்டச் செயலகம்
- யாழ் பிரதேச செயலகம்
- நல்லூர் பிரதேச செயலகம்
- யாழ் மாநகர சபை - பொதுசனத் தொடர்பு பகுதி
- யாழ் பொது நூல்நிலையம்
- நவீன சந்தை - வாடிக்கையாளர் சேவை நிலையம்

ஆகிய இடங்களில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் இவ் வரைபு பாதீட்டினை பரிசீலித்து பாதீட்டினை மேலும் முன்னேற்றகரமானதாக ஆக்குவதற்கு தேவையான தங்களது கருத்துக்கள், முன்மொழிவுகளினை எதிர்வரும் 2023.02.10 ஆம் திகதிக்கு முன்னர் யாழ் மாநகர சபை செயலகத்திற்கு எழுத்து மூலம் அறியத் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

2023.02.01

இம்மானுவல் ஆனல்ட்
முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

## The Northern Chamber of Industries
## Vacancy announcement
## Chief Executive Officer

We are looking for someone young energetic who is committed, proactive and versatile leader for the Position of Chief Executive Officer will be

**Position Objectives**

- He/she has full responsibility for the implementation of the German Asia Pacific Business Association OAV funded project, to coordinate with the Micro small and medium Entrepreneurs of Northern Region while developing new initiatives and partnerships with other business and community organizations to achieve regional goals and objectives;
- Committed to work in the field, maintain awareness of the landscape of the Northern Region Competent in riding motorbike, having driving license.

**Requirements**

- Education: Degree in Bachelor of Business adminis tration preferred.
- Experience minimum of 5 years' in executive management and leadership position within the nonprofit sectors (NGOs, UN Interagency) demonstrating progressively greater responsibility will be considered in lieu of academic credential
- Excellent communication and Human resource manage ment skills

An attractive remuneration will be offered to the selected candidate. Please post your application and the CV with two non-related referees within Ten (10) days and state the post applied for in the top of the envelop left hand corner and post to the below address.

Dead line for the application is Feb 10th of 2023

**The Chairman**
**Northern Chamber of Industries**
**No 54, Clock Tower Lane**
**Jaffna.**

(cs23232) (4/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணில்
14 • 02 • 1951



விண்ணில்
05 • 01 • 2023

கடந்த (05.01.2023) வியாழக்கிழமை அதிகாலை
சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் சுப்பிரமணியம் சாந்தநாயகி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (01.02.2023) புதன்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (03.02.2023) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்திகேட்டு எமக்குப் பல வழிகளிலும் உதவிபுரிந்த வர்களுக்கும், பதாகைகள், அஞ்சலிகள் அச்சிட்டு வெளியிட்டவர்களுக்கும், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்திய பொது நிறுவனங்களுக்கும், நேரிலும், தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும், இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.


"தமிழகம்"
வேளாவை,
அளவெட்டி மத்தி, அளவெட்டி.
021 205 9661

குடும்பத்தினர்

(cs.23235) (2.6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மகிழ
04 • 11 • 1942



கண் நெகிழ
14 • 01 • 2022

### அமரர் வேலுப்பிள்ளை பரமேஸ்வரன்

Retd.Shipping Executive ( Jafferjee Brothers (Pvt) Ltd.)

திதி - 02.02.2023

நேர்மையாலும் ஒழுக்க விழுமியங்களாலும்
கடின உழைப்பினாலும் உயர்ந்த உத்தமரே !
அனைவருடனும் அன்புடன் பழகி
நெஞ்சார நேசித்து மனமார வாழ்ந்து
எமக்கும் அன்பைக் கற்றுக் கொடுத்த தந்தையே !
நீங்கள் இப்பூவுலகை நீங்கிடினும்
எம் நெஞ்சத்தில் என்றும் நிறைந்து வாழ்கின்றீர்கள் ஐயா !

- உங்கள் நினைவாய் குடும்பத்தினர் -

109/7, மனிங்பிளேஸ், கொழும்பு -06
077 - 3504336

## மரண அறிவித்தல்

பிறப்பு
02 • 03 • 1987



இறப்பு
31 • 01 • 2023

### திருமதி சுதாகர் மோகனா

கப்பூதூவைப் பிறப்பிடமாகவும் கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுதாகர் மோகனா நேற்றுமுன்தினம் (31.01.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சாம்பசிவம் சரோஜினிதேவி தம்பதியரின் அன்பு மகளும், சகாதேவன் காலஞ்சென்ற சந்திரலேகா தம்பதியரின் மருமகளும், சுதாகரின் அன்பு மனைவியும், ஜெயரூபி, ஜெயரூபன், ஜெயமோகன் ஆகியோரின் அன்புச் சகோதரியம், லக்குணேஸ்வரன், யசோதா, தவாஜினி, சங்கர், சாமினி, சுதர்சினி, கஜீவன் ஆகியோரின் மைத்துனியும், தாட்சாயினி, சஜீவன், சுதாபவன் ஆகியோரின் சகலியும், யசாந், ஜெயர்சன், யதுர்ஷன், சேகரன், மேனுஷா ஆகியோரின் அன்பு மாமியும், கீர்த்திகா, ஜீவநாத், சகானா, சானுஜா ஆகியோரின் பெரியயம்மாவும், பிரவீன் அனனியா ஆகியோரின் சித்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2023) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அந்திரான்,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்
சுதாகர் - 077 662 5143

## மரண அறிவித்தல்

தோற்றம்
27 • 08 • 1946



மறைவு
31 • 01 • 2023

### இளையகுட்டி சண்முகலிங்கம்

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையகுட்டி சண்முகலிங்கம் 31.01.2023 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையகுட்டி விசாலாட்சிப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற அழகரத்தினம், பொன்னுப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், ஜனிதா (ஆசிரியர் - யா/மகாஜனக் கல்லூரி), ஜனீந்திரன் (ஜேர்மனி), ஜனீந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிறிகாந்தன், மேனகா (ஜேர்மனி), சந்திரகுமார் ஆகியோரின் மாமனாரும், தனோஜா, தர்சிகா, அபிநயா, வித்தகன், பிரணவி (ஜேர்மனி), அபர்ணா (ஜேர்மனி) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம், குணரத்தினம் மற்றும் திலகவதி, சிவராஜலிங்கம், கௌரிதேவி, சுந்தரலிங்கம், காலஞ்சென்ற தர்மலிங்கம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.02.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்.நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பங்கிலிட்டி,
பன்னாலை, தெல்லிப்பளை.
077 651 0096

தகவல்:
குடும்பத்தினர்
பன்னாலை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### வடக்கு- கிழக்கு மாகாணத்தில்
## இளையசமூகத்தை கட்டியெழுப்ப தலைமைத்துவப் பயிற்சிப்பட்டறை

வவுனியா, ஜன. 2

இளையோர் சமுதாயத்தை கட்டியெழுப்பும் முகமாக வவுனியா பல்கலைக்கழகத்தின் வியாபாரக் கற்கைகள்பீடத்தின் சமூகத்தொடர்பு மையத்தினூடாக வடக்கு - கிழக்கில் தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறை நடத்தப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிறுவன மற்றும் ஏனைய பங்காளர்களான சமூக அபிவிருத்தி நிறுவனங்களின் அனுசரணையில் இந்த தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 9 பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இந்தப் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்ப நிகழ்வு வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் த.மங்களேஸ்வரன் தலைமையில் துணைவேந்தர் அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் த. மங்களேஸ்வரன் உரையாற்றுகையில்,

இந்தப் பயிற்சி நெறியானது வடக்கு- கிழக்கு இளைஞர் யுவதிகளை நல்வழிப்படுத்தி அவர்களுக்கான எதிர்காலத்தை கட்டியெழுப்ப உதவிபுரிவதாக அமையும் எனத் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலர் ஆ. சிவபாதசுந்தரம் உரையாற்றுகையில், அரசாங்க நிறுவனங்களில் மேலதிகமாக உள்ள மனித வளங்கள் வீணடிக்கப்படுகின்றது. இவ்வாறான சவால்களை இதுபோன்ற பயிற்சி வகுப்புக்களில் எடுத்துரைத்து வருங்கால இளைஞர்களை சரியான முறையில் வழிநடத்த உதவும். அத்துடன் சமூகத்தில் சிறந்த தலைவர்களாக செயற்படுவதோடு பயிற்சியினூடாக பெறப்பட்ட அறிவு மற்றும் அனுபவங்களை தன் சார்ந்தோர்களுக்கும் மற்றும் சமூகத்துக்கும் எடுத்துரைப்பவராக திகழ்வார் - என்றார். (ச)

# ராஜபக்சக்கள் சூறையாடியதை ஈடுகட்டுவதற்கே வரிகள் விதிப்பு

### சஜித் ஆவேசம்



கொழும்பு, பெப். 2

ராஜபக்சக்கள் திருடிய பணத்தை ஈடுகட்டுவதற்கே அப்பாவிப் பொதுமக்கள் மீது வரிகள் குவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன – இவ்வாறு தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டைக் கட்டியெழுப்ப புதிய இலக்கும், தொலைநோக்குப் பார்வையும் தேவைப்பட்டாலும், நடைபாதையில் வியாபாரம் செய்யும் வியாபாரி முதல் எல்லோர் மீதும் தற்போதைய அரசாங்கம் வரிக்கு மேல் வரி விதித்து வருகின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் உத்தரவுகளை நடைமுறைப்படுத்துவதாகவே இந்த வரி விதிப்புகள் என்று அவர்கள் காரணம் சொல்கின்றனர். ஆனால், அதில் உண்மையில்லை. சர்வதேச நாணய நிதியத்தைக் கையாள்வதற்கு குறைந்தளவு வரி விதிப்புக்களே போதுமானதாக இருக்கும். ராஜபக்சக்கள் திருடிய பணத்தை ஈடுகட்டுவதற்கே இந்த வரிவிதிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்ததும் நாட்டு மக்கள் மீது எந்த அழுத்தமும் இல்லாத வகையில் சர்வதேச நாணய நிதியத்தை கையாளும். அதையே 220 இலட்சம் மக்களும் எதிர்பார்க்கின்றனர் - என்றார். (ம)



## 4.2 மில்லியன் ரூபா செலவில் கசூரினாக்கு முட்கம்பி வேலி

யாழ்ப்பாணம், பெப். 2

காரைநகர் பிரதேசசபையின் 4.2 மில்லியன் ரூபா செலவில் கசூரினா கடற்கரைப் பிரதேசத்தின் எல்லைக்கு ஆயிரத்து 410 அடி நீளமான நிரந்தர முட்கம்பி வேலி அமைத்து முடிவுறுத்தப்பட்டுள்ளது.

ஈழத்து சிதம்பரத்தின் தீர்த்தக்கரையின் மூலம் கசூரினா கடற்கரைப் பிரதேசத்துக்குள் பிரவேசிப்பதும், இராணுவ முகாம் பிரதேசத்திலிருந்து கடற்கரைக்குப் பிரவேசிப்பதும் முற்றாகத் தடுக்கப்பட்டுள்ளது. (ஒ-14,27)

## மதுபான வசதியுடனான விடுதிக்கு எதிராகப்போர்

கிளிநொச்சி, பெப். 2

கிளிநொச்சி, அக்கராயன் மேற்கில் மதுபான விற்பனை நிலையத்துடன் சேர்ந்த விடுதியொன்று திறப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதேசவாசியொருவர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

ஆடம்பர விடுதியைத் திறப்பதற்கு எதிராகப் பலரும் தமது எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர். கிளிநொச்சி மாவட்ட செயலாளர், கரைச்சி பிரதேச செயலாளர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கும் அவர்கள் எழுத்து மூலமாக தமது எதிர்ப்பைக் கையளித்துள்ளனர். இந்த நிலையிலேயே பிரதேசவாசியான முருகையா இராசலிங்கம் என்பவர் நேற்றுமுன்தினம் நண்பகல் 12 மணியளவில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார். மக்கள் செறிந்து வாழும் தமது பகுதியில் மதுபான விற்பனை நிலையம் வேண்டாம் என அவர் தெரிவித்துள்ளார். (ம)

## 'அன்பே சிவம்' விருது பெறும் அறப்பணியாளர் ஆறுமுகம்

வவுனியா, பெப்.2

வவுனியா கோவிற்குளம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் ஆலயத் தர்மகர்த்தாவும் 'அருளகம்' சிறுவர் இல்லம் மற்றும் சிவன் முதியோர் இல்லத்தின் ஸ்தாபகருமான ஆறுமுகம் நவரட்ணராசாவுக்கு 'அன்பே சிவம்' விருந்து அகில இலங்கை சைவமகா சபையால் வழங்கப்படவுள்ளது.

விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வவுனியா கோவிற்குளம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் ஆலய காஞ்சி சிவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. அகில இலங்கை சைவமகாசபையின் தலைவர் நா.சண்முகரத்தினம் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் வவுனியா மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் தி. திரேஸ்குமார் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். (ச-66)

## வெள்ளோட்ட பெருவிழா

யாழ்ப்பாணம், பெப்.2

யாழ்ப்பாணம் வண். வடகிழக்கு அருள்மிகு இளைமூத்த நைனார் (கொண்டலடி விநாயகர்) ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்டப் பெருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ச)



## யாழ்ப்பாணத்தில் திருவள்ளுவர் சிலை

யாழ்ப்பாணம், பெப். 2

வி.ஜி.பி உலகத் தமிழ்ச் சங்கம் அமைத்த 146 ஆவது திருவள்ளுவர் திருவுருவச் சிலை யாழ்ப்பாணம் முற்றவெளிக்கு முன்பாக பிரதம அஞ்சலகத்துக்கு எதிரே உள்ள சாலை வட்டத்துள் விரைவில் நிறுவப்படவுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வு யாழ்ப்பாணம் நில்கோ தனியார் விருந்தினர் விடுதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் சென்னையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள வி.ஜி.பி உலகத் தமிழ்ச் சங்கத் தலைவர் முனைவர், கலைமாமணி, வாழ்நாள் சாதனையாளர் விஜி சந்தோஷம் தலைமையில், இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன் புலவு க.சச்சிதானந்தன் கலந்துகொண்டு திருவள்ளுவரின் திருவுருவச் சிலையை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார். (ஒ-14,66)

## 'கியூ.ஆர்.' முறையை கட்டாயம் கடைப்பிடிக்குக!

### இல்லையேல் சட்ட நடவடிக்கை
### பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், பெப்.2

எரிபொருள் விற்பனை நிலையங்களில் கியூ. ஆர். நடைமுறை பின்பற்றப்படாதுவிடின் எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவுறுத்தியுள்ளது.

எரிபொருள் விற்பனை நிலையங்கள் கட்டாயமாக கியூ.ஆர். நடைமுறையின் கீழ் எரிபொருளை விநியோகிக்கவேண்டும்.

கடந்த முதலாம் திகதி முதல் இந்த நடைமுறை இறுக்கமாக்கப்பட்டுள்ளது.

சோதனை நடவடிக்கைகள் பின்பற்றப்படாமை கண்டறியப்பட்டால் எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு எதிராக கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். (ச-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 13ஆவது திருத்தத்துக்கு எதிராகப் போரிடுவேன்

## வீரசேகர மீண்டும் இனவாதம்



கொழும்பு, பெப். 2
அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை கிடையாது. நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் இன நல்லிணக்கத்துக்கும் பாதிப்பு ஏற்படும் செயற்பாட்டுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. 13 ஆவது திருத்தத்துக்கு எதிராக தனித்தேனும் தொடர் போராட்டத்தில் ஈடுபடுவேன் என நாடாளுமன்ற உறுப்பினர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் மீது பற்றுக் காணப்பட்டால் கூட்டமைப்பினர் புலம்பெயர் அமைப்புக்களின் முதலீடுகளை தாராளமாக பெற்றுக்கொடுக்கலாம். புலம்பெயர் அமைப்புக்களின் முதலீடுகளுக்காக நாட்டை காட்டிக் கொடுக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினரும், புலம்பெயர் தமிழ் அமைப்பினரும் ஜனாதிபதிக்கு கடும் அழுத்தம் வழங்குகின்றனர். எதற்காகவும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடை முறைப்படுத்த இடமளிக்கமுடியாது. அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடை முறைப்படுத்த வேண்டிய தேவை கிடையாது. காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைத் தவிர ஏனைய அதிகாரங்கள் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மாகாணசபைத் தேர்தல் உரிமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பாதுகாக்கவில்லை. மாகாணசபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே காரணம். அவர்கள் தமது அரசியல் இலாபத்துக்காக மாகாண சபைத் தேர்தலை பிற்போட நல்லாட்சி அரசாங்கத்துக்கு (மைத்திரி - ரணில் அரசாங்கம்) ஆதரவாகச் செயற்பட்டார்கள்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமை தொடர்பில் கருத்துரைக்கும் கூட்டமைப்பினர் உண்மை நோக்கத்துடன் செயற்படவேண்டும். அரசியல் தீர்வு என்று குறிப் பிட்டுக் கொண்டு இவர்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை இல்லாதொழித்துள்ளார்கள். அபிவிருத்தி தொடர்பில் அரசாங்கத்துடன் பேச்சில் ஈடுபட்டால்; அரசியல் தீர்வு தொடர்பான பேச்சு வார்த்தை வலுவற்றதாகி விடும் எனக் குறிப்பிடும் கூட்டமைப்பினர் கொழும்பில் இருந்து கொண்டு அரச வரப்பிரசாதங்களை முழுமையாக அனுபவிக்கிறார்கள். தமிழ் மக்கள் உண்மையை விளங்கிக்கொள்ள வேண்டும் - என்றார். (ம)

## துரையப்பா அரங்கில் சுதந்திரநாள்

யாழ், பெப். 2
வடக்கின் 5 மாவட்டங்களும் இணைந்து வடக்கு மாகாணத்துக்குரிய இலங்கையின் சுதந்திரநாள் நிகழ்வுகள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நாளை மறுதினம் சனிக்கிழமை கொண்டாடப்படவுள்ளது. காலை 8 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

### கல்வியங்காடு...

யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபர், யாழ்ப்பாணம் கலட்டிப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே மூவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையில் மேலும் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இருவர் தேடப்பட்டு வருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு டென்மார்க்கில் இருந்து பணம் வழங்கப்பட்டுள்ளமை விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது. பாடசாலை ஒன்றின் அபிவிருத்திச் சங்க முரண்பாடு ஒன்று காரணமாக டென்மார்க்கிலுள்ள ஒருவர் பணம் அனுப்பி இந்தத் தாக்குதலை வழிநடத்தியுள்ளார் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். அதேவேளை, இந்தச் சம்பவத்தில் தென்மராட்சியைச் சேர்ந்த ஒருவர் தொடர்புபட்டுள்ளார் என்பது விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். அவர் ஊடாகப் பணப்பரிமாற்றம் நடந்துள்ளது என்றும் கூறப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றது என்றும், சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-26)

### தமிழ்...

காலம்முடிந்து விடுதலையாகவிருந்தவர். மற்றைய ஒருவர் மேன்முறையீடு செய்துள்ள நிலையில், அது இரத்துச் செய்யப்பட்ட பின்னரே சிறையில் இருந்து விடுவிக்கப்படுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

2009 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் கைது செய்யப்பட்ட எஸ்.கிருபாகரன், வி.றொபின்சன் மற்றும் செல்லையா சதீஸ்குமார் ஆகியோரே பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டுள்ளனர். 2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட கிருபாகரனின் தண்டனைக் காலம் எதிர்வரும் மார்ச் மாதத்துடன் நிறைவடையவுள்ளது.

அதேவேளை, பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டுள்ள செல்லையா சதீஸ்குமார் தொடர்ந்தும் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவர் மேன்முறையீடு செய்துள்ளதால் அவர் அதை மீளப்பெறும்வரையில் சிறையில் தடுத்து வைக்கப்படுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-7)

### கூட்டத்தில்...

குழுவின் கூட்டத்தில் அவர் பங்கேற்கவில்லை.

உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக பலதரப்பும் குற்றம்சுமத்தும் நிலையில், தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பதவியிலிருந்து திருமதி பி.எம்.எஸ்.சாள்ஸ் பதவி விலகுவதாக அறிவித்திருந்தார். ஆனாலும், அவரது பதவி விலகலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் உறுப்பினர் பி.எம்.எஸ்.சாள்ஸ் கலந்துகொள்ளவில்லை. ஏனைய 4 உறுப்பினர்களும் பங்கேற்றனர். (அ-ஒ-5)

### உள்ளூராட்சித்...

உறுதியளித்தார் என்று அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்கச் செயலாளர் விக்ரோறியா நூலண்ட் தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு நேற்றுக்காலை இலங்கை வந்த அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்கச் செயலாளர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்த பின்னர், தமிழ் - முஸ்லிம் மக்களின் அரசியல் தலைவர்களை ஒன்றாகச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.


கொழும்பிலுள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், புளொட் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த விக்ரோறியா நூலண்ட், உள்ளூராட்சி சபைத் தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் 9 ஆம் திகதி நிச்சயம் நடைபெறும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னிடம் உறுதியளித்தார் என்று அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்கச் செயலாளர் விக்ரோறியா நூலண்ட் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தகவலை சந்திப்பில் கலந்து கொண்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். (அ-எ-22)


## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 12 . 1946



மறைவு 01 . 02 . 2023

**கதிரவேலு கருணைநாயகம் (கருணர் மாஸ்டர்)**

**(கருணை கல்வி நிலைய இயக்குநர், உடுவில் பிரதேச சபை உறுப்பினர்.)**

தில்லைகட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு கருணைநாயகம் அவர்கள் நேற்று (01.02.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து (ராசா) தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பானுமதி (பானு) அவர்களின் பாசமிகு கணவரும், ரேகா, ராணி, ரகு, காலஞ்சென்ற பாபு ஆகியோரின் அன்பு மைத்துனரும், ராஜன், பாலகிருஷ்ணன், தனுஜா ஆகியோரின் சகலனும், பிரியங்கா, லக்ஷனா, யருஷன், கர்னிகா, ஜனனன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2023) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தில்லைகட்டி,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 191 0009

(CS 23252) 1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம்...

மாவட்டச் செயலகத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது. பலாலி அன்ரனிபுரத்தில் இதற்கான நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

இராணுவத்தினரிடமிருந்து காங்கேசன்துறை மத்தியில் (ஜே/234) வெளிச்சவீட்டிலிருந்து துறைமுகம் வரையிலான பிரதேசத்தில் 40 குடும்பங்களுக்குச் சொந்தமான 26 ஏக்கர் காணியும், அதே கிராம அலுவலர் பிரிவில் இராணுவத்தின் பொறியியல் பிரிவு அமைந்துள்ள 24 ஏக்கர் காணியும் விடுவிக்கப்படவுள்ளன. இவை 45 குடும்பங்களுக்குச் சொந்தமானவை. மயிலிட்டி வடக்கு (ஜே/246) கிராம அலுவலர் பிரிவில் 17 குடும்பங்களுக்குச் சொந்தமான 16 ஏக்கர் காணியும், பலாலி வடக்கு அன்ரனிபுரத்தில், பருத்தித்துறையில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்காக 13 ஏக்கர் காணியும் விடுவிக்கப்படவுள்ளன.

நகுலேஸ்வரம் (ஜே/226) இல் 20 குடும்பங்களுக்குச் சொந்தமான 20 ஏக்கர் காணியும் நாளை ஒப்படைக்கப்படவுள்ளது. (அ-ஒ-5)

## ரணிலுக்கு...

ஒவ்வொரு விடயமாக முன்வைத்து அவற்றைப் பெற்றுக்கொள்ள முயலுங்கள், அதற்கு அமெரிக்கா ஆதரவளிக்கும். பொறுப்புக்கூறலைக் கோருவதற்கான சந்தர்ப்பம் இதுவல்ல.

இவ்வாறு அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்கச் செயலாளர் விக்ரோறியா நூலண்ட் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கடிகள் ஏற்படுத்தாது சிறுபான்மைக் கட்சிகள் நடந்துகொள்ளவேண்டும் என்பதே அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்கச் செயலாளருடன் இடம்பெற்ற சந்திப்பில் மறைமுகமாகத் தெரிவிக்கப்பட்டது என்று சந்திப்பில் கலந்துகொண்ட தரப்புக்கள் தெரிவிக்கின்றன.

**நம்பிக்கையில்லை**

விக்ரோறியா நூலண்ட் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்த பின்னர், தமிழ் - முஸ்லிம் மக்களின் அரசியல் தலைவர்களை ஒன்றாகச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இந்தச் சந்திப்பில் இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வகட்சிக் கூட்டம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த தமிழ்க் கட்சிகள், பொதுஜன பெரமுனவில் தங்கியுள்ள ஜனாதிபதியால் இனப்பிரச்சினைத் தீர்வு, அரசமைப்பு மாற்றம், காணி விடுவிப்பு, 13 ஆவது திருத்தம் நடைமுறை போன்றவற்றை நிறைவேற்றுவது கடினம் என்று சுட்டிக்காட்டியுள்ளன.

13 ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்துவதை ஆதரித்தாலும், சமஷ்டி முறையிலான தீர்வே தங்களது இலக்கு என்றும் தமிழ்க் கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

சொல்வதைச் செயலில் காட்டும்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உங்கள் நல்லுறவைப் பயன்படுத்திக் கூறுங்கள் என்றும் தமிழ்க் கட்சிகள் விக்ரோறியா நூலண்டிடம் தெரிவித்துள்ளன.

**ஒவ்வொன்றாக நடக்கும்**

அதற்குப் பதிலளித்த விக்ரோறியா நூலண்ட், ஜனாதிபதி அரசியல் பலம் இல்லாதவரைப் போன்று தென்பட்டாலும் படிப்படியாகப் பல விடயங்களை நிறைவேற்றிக்கொள்ளமுடியும். சிறுபான்மைக் கட்சிகள் ஒன்றாகக் கலந்துரையாடி எந்தெந்த விடயங்களைப் பெறுவது என்பது தொடர்பில் வழி வரைபடம் ஒன்றைத் தயாரிக்கவேண்டும். ஒவ்வொரு விவகாரமாக எடுத்து அவற்றைப் பெறவேண்டும். அவற்றைப் பெற அமெரிக்கா துணை நிற்கும் என்று தெரிவித்துள்ளார்.

**பொறுப்புக்கூறல்**

சந்திப்பில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொறுப்புக்கூறல் நடைமுறையைக் கைவிடமுடியாது என்றும், அதற்கு அமெரிக்கா அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும் கோரினார். 13ஆம் திருத்தம் தீர்வுமல்ல, தீர்வுக்கான தொடக்கப்புள்ளியுமல்ல என்று தெரிவித்த அவர் ஒற்றையாட்சிக்குட்பட்ட எந்தவொரு தீர்வும் தமிழ் மக்களுக்கு ஏற்புடையதல்ல என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். தற்போதைய சூழலில் பொறுப்புக்கூறலைக் கையில் எடுப்பது, தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு உபாயமாக அமையும். பொறுப்புக்கூறல் விவகாரம் மஹிந்த ராஜபக்ச தரப்புக்கு அழுத்தமாக அமையும். அவர்கள் அதிலிருந்து தப்புவதற்கு ரணில் விக்கிரமசிங்கவின் தீர்வு முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்து, சிக்கல்களைத் தீர்க்க முயற்சிப்பார்கள் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டினார்.

பொறுப்புக்கூறலை வலியுறுத்துவது தேவையான நல்ல விடயம் என்று குறிப்பிட்ட விக்ரோறியா நூலண்ட், ஆனால் அதற்கு இது உகந்த தருணம் இல்லை என்று தெரிவித்தார். பொறுப்புக்கூறலைத் தற்போது வலியுறுத்த ஆரம்பித்தால் அது ஏனைய விடயங்களைச் சிக்கலாக்கிவிடலாம். அதனால் பொறுப்புக்கூறல் விவகாரத்தைப் பின்னர் பார்த்துக்கொள்ளலாம் என்ற சாரப்படப் பதிலளித்துள்ளார்.

**புதிய அரசமைப்பு**

புதிய அரசமைப்பு உருவாக்கம் நடைபெறும் என்று தெரிவித்த விக்ரோறியா நூலண்ட், அது ஜனாதிபதித் தேர்தலில் பின்னரா அல்லது முன்னரா என்பது தனக்குத் தெரியவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். இந்த நடவடிக்கைகள் அநேகமாக அடுத்தாண்டு நடக்கலாம் என்றும் கூறியுள்ளார். இதனால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க களமிறங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் பொருளாதார நெருக்கடி தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த விக்ரோறியா நூலண்ட், சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் விரைவில் இலங்கைக்குக் கிடைக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி மூலம் இலங்கை தொடர்பான நம்பிக்கை உருவாகும். பல நாடுகள் இலங்கைக்கு உதவி மற்றும் முதலீடுகளைச் செய்யும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-எ-இ)

## '13' முழுமையாக...

இலங்கை வந்துள்ள அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்கச் செயலர் விக்ரோறியா நூலண்டுக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே நேற்று சந்திப்பு ஒன்று நடைபெற்றது. ஜனாதிபதி அலுவலகத்தில் நடந்த இந்தச் சந்திப்பின்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த உறுதிமொழியை வழங்கினார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது:-

இலங்கையை வழமைக்குக் கொண்டுவரும் முயற்சிகளுக்கு தங்களது ஆதரவு தொடரும் என்று விக்ரோறியா நூலண்ட் தெரிவித்தார். இலங்கை எதிர்நோக்கும் கடினமான சூழ்நிலையில் அமெரிக்கா வழங்கிய ஆதரவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நன்றி தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்கள் தொடர்பில் இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது. பிரச்சினைகளுக்கான அவசர தீர்வுக்கு அமெரிக்கா ஆதரவளிக்கும் என்று விக்ரோறியா நூலண்ட் தெரிவித்தார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாகச் செயற்படுத்துவது மற்றும் சிறிய கட்சிகளுடன் நடத்தப்படும் பேச்சுகள், நல்லிணக்க முயற்சிகள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

அதிகரிக்கும் போதைப்பொருள் வர்த்தகத்துக்கு எதிராக முன்னெடுக்கப்படும் முயற்சிகள் தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது. அந்த நடவடிக்கைகளுக்கு அமெரிக்காவின் ஆதரவை விக்ரோறியா நூலண்ட் தெரிவித்தார் - என்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, ஜனாதிபதியின் சர்வதேச உறவுகள் பணிப்பாளர் தினுக் கொலம்பகே, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-22)

## '13ஐ'...

இந்திய வம்சாவளி தமிழர்கள் உட்பட அனைத்து மக்களினதும் மனித உரிமைகளையும் இலங்கை உறுதி செய்ய வேண்டும் என்றும் இந்தியா வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பாக ஜெனிவாவில் நேற்று முதல் நடைபெற்றுவரும் 42ஆவது அமர்வில் உலகளாவிய காலநடைமுறை தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் செயற்குழு பரிசீலனைகளை ஆரம்பித்துள்ளது. 2006 ஆம் ஆண்டு ஐ.நா. சபையின் பொதுச்சபையால் நிறுவப்பட்ட உலகளாவிய காலநடைமுறை தொடர்பான மதிப்பாய்வுக் குழுவால் ஒவ்வொரு உறுப்பு நாடும் நான்கரை ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பாய்வுக்குட்படுத்தப்படுகின்றது.

2008 ஆம் ஆண்டு முதல் தடவையாகவும் 2012 ஆம் ஆண்டு இரண்டாவது தடவையாகவும் 2017 ஆம் ஆண்டு மூன்றாவது தடவையாகவும் இலங்கை உட்பட அனைத்து உறுப்பு நாடுகளின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பாக மதிப்பாய்வுகள் செய்யப்பட்டன.

நான்காவது சுழற்சியின் கீழ் 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் 22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மற்றும் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் உலகளாவிய காலநடைமுறை தொடர்பான குழுவால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயப்படுகிறது.

அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விரிவான ஆலோசனைகளின் பின்னர் வெளிவிவகார அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் தேசிய அறிக்கை தயாரிக்கும் செயல்முறை மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் காலகட்டத்தில் 75 ஆவது சுதந்திரக் கொண்டாட்டங்கள் நடைபெறுவதால் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மீளாய்வுக்கான அறிக்கையை முன்னரே பதிவுசெய்யப்பட்ட காணொலி அறிக்கை மூலம் சமர்ப்பிக்கவுள்ளார்.

மனித உரிமை மேம்படுத்த அரசாங்கம் சுயமாக முன்வந்து ஏற்றுக்கொண்ட விடயங்கள் மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட விதம் தொடர்பாகவும் அந்த அறிக்கையில் அவர் தெளிவுபடுத்துவார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-இ)

## பெற்றோல்..

ரகப் பெற்றோலின் விலை 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு, ஒரு லீற்றர் பெற்றோலின் புதிய விலை 400 ரூபா என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## முக்கியமான...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுக்கவுள்ளார். 9 ஆவது நாடாளுமன்றத்தின் 4 ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் 8 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஜனாதிபதியால் ஆரம்பிக்கப்படும்.

அன்றையதினம் ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை இடம்பெறவுள்ள நிலையில், அதில் அவர் சில முக்கியமான விடயங்களைக் குறிப்பிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் வெளியிட்ட கருத்துக்களை உள்ளடக்கியே அவரது கொள்கை விளக்கவுரை அமையும் என்று தெரியவருகின்றது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டியது தனது கடப்பாடு என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் அறிவித்திருந்தார். அரசமைப்பில் உள்ள விடயத்தைத் தன்னால் மீற முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

அதேநேரம், ஜனாதிபதியின் இந்த அறிவிப்புக்கு சிங்கள தேசியவாத அமைப்புக்கள் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளன. (அ-எ-44)

## மாகாணத்தின்...

அதிகாரப் பறிப்பு நடந்துள்ளது.

மாகாணசபைகளுக்குரிய கல்வி அதிகாரத்திலிருந்து ஏற்கனவே, மாகாணப் பாடசாலைகளை தேசியப் பாடசாலைகளாக தரம் உயர்த்தி அவற்றை கையகப்படுத்தும் நடவடிக்கைகளில் கொழும்பு அரசு ஈடுபட்டுள்ளது. இந்த நிலையில் மாகாணப் பாடசாலைகளுக்கு பட்டதாரிகளை ஆசிரியர்களாக உள்ளீர்க்கும் அதிகாரம் மாகாண சபைகளுக்குரியதாக உள்ள நிலையில் அவற்றையும் கொழும்பு அரசு பிடுங்கியெடுத்துள்ளது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபைகளின் நிர்வாகம் நடைமுறையில்லாத சூழலில், ஆளுநர்களின் ஒப்புதலுடன் மாகாணத்துக்குரிய மேற்படி அதிகாரத்தை கொழும்பு அரசு பறித்தெடுத்துள்ளது. திவிநெகும சட்டம் தொடர்பிலும் மாகாண சபைகள் இல்லாத நிலையில் கொழும்பு அரசு, ஆளுநர்களின் ஒப்புதலைப் பெற்று மாகாண அதிகாரங்களைப் பிடுங்கியெடுத்திருந்தது.

26 ஆயிரம் பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் உள்ளீர்ப்பதற்காக வர்த்தமானி அறிவித்தல் கொழும்பு அரசால் வெளியிடப்பட்டுள்ளது. இது முழுமையாக மாகாணத்துக்குரிய அதிகாரம் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம் மோசடிக்கு போலி ஆவணங்கள்

## சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, பெப். 2

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்துக்கு வரும் நபர்களிடம் பணம் மற்றும் தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொண்டு போலி ஆவணங்களைத் தயாரித்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் பத்தரமுல்லை, இசுருபாய குடிவரவு திணைக்களத்துக்கு கடவுச்சீட்டு பெற்றுக்கொள்ள வந்த நபர்களிடம் போலியான வேலைவாய்ப்பு அனுமதிப்பத்திரம் தயாரித்து, ஒருநாள் சேவையின் மூலம் கடவுச்சீட்டை தயார் செய்து தருவதாகக் கூறி பல்வேறு நபர்களிடம் ஆயிரம் ரூபா முதல் 20 ஆயிரம் ரூபா வரை வசூலித்துள்ளனர் என்று தலங்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் விண்ணப்பதாரர்களிடம் இருந்து பலவந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் மற்றும் தேசிய அடையாள அட்டைகளும் மீட்கப்பட்டன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தலங்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். மேலும் கடவுச்சீட்டு பெற செல்பவர்கள, இத்தகைய மோசடியாளர்கள் தொடர்பில் எச்சரிக்கையாக இருக்குமாறு பொலிஸாரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஒ-14.இ)


## மணமகள் தேவை

1988 இல் பிறந்த யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு (1இல் செவ்வாய்) பொருத்தமான மணமகளை எதிர்பார்க்கின்றோம்.

077 958 8558

## மணமகள் தேவை

1984 இல் பிறந்த பிரான்ஸில் வசிக்கும் PR உடைய விவாகரத்து பெற்ற கிறிஸ்தவ (R.C) குருகுலம் மணமகனுக்கு மணமகள் தேவை. விவாகரத்து பெற்றவர்களும் தொடர்புகொள்ளலாம்.

T.P.: 077 086 8917

## வாடகைக்குத் தேவை

நாவற்குழி கைதடி விலாசத்தில் இயங்கும் தனியார் நிறுவனத்திற்கு மாதாந்த வாடகைக்கு டெலிவரி வாகனங்கள் தேவை. பட்டா, சுப்பர் ஏஸ் போன்றவை விரும்பப்படும்

தொடர்பு: 077 732 4117
076 399 7535

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சாவகச்சேரி (A9) நுணாவில், கண்டி பிரதான வீதி முகப்பாக 4 நில.பரப்புக் காணி விற் பனைக்கு உண்டு. கடைத்தொகுதிகள், வணிகங்கள், திருமண மண்டபங் கள், ஹொட்டல்கள், வடக்கு வாசல் வீடுகள் அமைப்ப தற்கு ஏற்ற இடம். நல்ல தண்ணீர். நல்ல சூழல்.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தரகர் தேவை இல்லை.

076 690 6272


## மரண அறிவித்தல்



தோற்றம் 17 • 03 • 1952

மறைவு 31 • 01 • 2023

### ருத்திரசீலன் நவரட்ணதேவி (மணி)

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், கரம்பொன் கிழக்கையும், புதுச்செட்டித்தெரு கொழும்பையும், வசிப்பிடமாக கொண்ட ருத்திரசீலன் நவரட்ணதேவி நேற்றுமுன்தினம் (31.01.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ருத்திரசீலனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் மகேஸ்வரியின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லத்துரை பகவதி அம்மாவின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தேவராசா (தவம் - கனடா), வரதராசா (சுவிஸ்), மோகனதாஸ் (கனடா), சுஜாதாதேவி (பிரான்ஸ்), ஜெகதாஸன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், உதயகுமார் (கனடா), சதீஸ்குமார் (அவுஸ்ரேலியா), செல்வகுமார் (அவுஸ்ரேலியா), ரவீனா (அவுஸ்ரேலியா), நவநீதா (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விமலராணி (கனடா), ஜெகதீஸ்வரி (அவுஸ்ரேலியா), நிதர்சினி (அவுஸ்ரேலியா), ஜனார்த்தன் (அவுஸ்ரேலியா), ஜொனத்தன் (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமியும், ஜஸ்விகா, ஹரிஸ், ரேஷ்னி, ஜாதவன், லுக்சிகா, சனோசன், லக்சரா, ஜானவிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.02.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.30 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

75 /14, யாழ். வீதி
(ஸ்ரீதர் தியேட்டர் அருகில்) யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

தொடர்பு:
077 892 1252, 077 905 4546, 074 217 8674, 071 754 9402

(cs 23236) (2.6)


## மணப்பெண் தேவை

01. அச்சுவேலி-புத்தூர், இந்து, கௌரவகுலம் (K), 1986, அனுசம், Administrative Professional, France Citizen, மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 25869
02. சுன்னாகம்-உடுவில், இந்து, கௌரவகுலம் (K), 1983, புனர்பூசம், Gradute, Network Operation Engineer, USA Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 28442
03. சுன்னாகம்- சாவகச்சேரி, இந்து, கௌரவகுலம் (K), 1996, மிருகசீரிடம், B.Sc Engineering, Australia Citizen, மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 32933
04. உரும்பிராய், இந்து, கௌரவகுலம் (V), 1974, திருவோணம், BSc,Finance Advisor, Canada Citizen, மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 23110
05. யாழ்ப்பாணம், இந்து, கௌரவகுலம் (V), 1982, அத்தம், Masters In Electrical Engineering (USA), Divorce, USA Citizen, மாப்பிள்ளைக்கு பெண்தேவை. பதிவெண் - 24750
06. Jaffna Town, RomanCatholic, கௌரவகுலம் (V), 1984, BBA, International Business Management, USA Citizen, மாப்பிள்ளைக்கு பெண்தேவை. பதிவெண் - 28771
07. மல்லாகம்-உடுவில், இந்து, கௌரவகுலம் (V), 1984, சுவாதி, BSc,Masters In Statistics, USA Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 28963
08. முல்லைத்தீவு, இந்து, குருகுலம், 1981, அத்தம், A/L, Accountant, USA Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. A/L படித்த பெண் போதுமானது. பதிவெண் - 29301
09. காரைநகர், இந்து, கௌரவகுலம் (V), 1986, உத்திராடம், Airspace Engineer, USA Citizen, மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண்- 27891
10. மானிப்பாய்-பளை, இந்து, கௌரவகுலம் (V), 1979, கார்த்திகை, Graduate, Canada Citizen, Divorce(Nullified), மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் - 28457

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer
Whatsapp - 077 803 8193
Phone - 077 539 3728

## Online Mathematics and Computer Science Tutoring

By Canadian Trained Teacher in Both Tamil and English Medium

**Taught By : Mr. Nanthivarman**

Credentials : BSc, State University of New York Institute of Technology
BEd, Ontario Institute For Studies In Education
MMT (Pending), University of Waterloo
OCT (Ontario Certified Teacher)

**O/L Mathematics**
**G.C.E A/L Combined Mathematics**
**Programming in Python / Java / C++**

- State of the Art Learning Management Platform
- Readily Available Digital Handouts & Notes
- Ongoing Assessments
- Affordable Tuition Fees
- Free Consultation for Higher Education in Canada

visit www.mathemperor.ca
for further details:
Whats App contact :
+1416 821 9591


## விண்ணக வாழ்வின் 10ஆம் வருட நினைவஞ்சலி



### அமரர் சின்னட்டி செல்லையா

தோற்றம் 17.05.1934

மறைவு 23.01.2013

திதி:– பூர்வபட்ஷ துவாதசி (02.02.2023)

அன்பும் பாசமும் நிறைந்த எங்கள் அன்புத் தெய்வம்
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஒரு தசாப்தம் ஆகிவிட்டது ஐயா!
உங்கள் ஆத்மாவிற்கு வலுவான சக்தி உள்ளது
என்பதை நாங்கள் அறிவோம். எனவேதான்
நீங்கள் மறைந்து 13ஆம் நாள் உடன்பிறப்பான
தம்பியை அழைத்தீர்கள்.
பின்பு அந்தியேட்டி நிகழ்வின் போது
உறங்கிக் கொண்டிருந்த எங்கள் எல்லோரையும்
தழுவி ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டு சென்றீர்கள்
உங்கள் ஆத்மாவின் சக்தி தான் இன்னும்
எங்கள் வாழ்வில் துணையாக நிற்கின்றது ஐயா!
உங்கள் ஆத்மா இறைவனடியில் இளைப்பாற
வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி! சாந்தி!

கலைநகர்,
அளவெட்டி தெற்கு.

குடும்பத்தினர்.



பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org